விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 29 வெள்ளிக்கிழமை (12.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 144

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## 700 பேருடன் வந்த கப்பலை சுற்றிவளைத்துத்தாக்குதல்

# வெற்றிலைக்கேணிக்கடலில் இரு டோறாக்கள் மூழ்கடிப்பு

### 20 கடற்படையினரைக் காணவில்லை

(கொழும்பு)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் 20 பேருடன் சென்ற கடற்படை டோறாப்படகுகள் இரண்டு கடற்புலிகளினால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.

அதிலிருந்த 20 பேரும் காணாமல் போயுள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. திருகோணமலையில் இருந்து 700 படையினரை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறைக்கு வந்துகொண்டிருந்த கப்பலுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த டோறாப் படகுகளே தாக்கியழிக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக்குழு தெரிவித்தது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெவ்டேயின் மறைவுக்கு தலைவர் பிரபா இரங்கல்

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன் புறுாவ் ஹெவ்டே மறைவுக்கு தமிழீழ தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ட்றொன் புறுாவ் ஹெவ்டே குடும்பத்தினருக்கு இவர் இரங்கல் கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளார். தமிழர் தாயகத்தில் அமைதியை உருவாக்குவதற்காக மிகவும் பிரச்சினைக்குரிய காலத்தில் பாரிய கடினமான பணியாக கண்காணிப்புக்குழுத் தலைவர் பொறுப்பில் இருந்து அவர் சிறப்பாக பணியாற்றினார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கான பங்களிப்பை கண்காணிப்புக் குழுத்தலைவர் பொறுப்பில் இருந்து மிகச் சிறப்பாக செயற்பட்டார்.

சமூக நீதித்தன்மையோடும் நடுநிலையோடும் ட்றொன் புறுாவ் ஹெவ்டே ஆற்றிய அரும்பணிகள் என்றும் பாராட்டுக்குரியது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் (08 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஹர்த்தால் இடைநிறுத்தம்


(திருகோணமலை)

திருகோணமலையில் பொங்கு தமிழ்ப் பேரவையின் சார்பில்நடத்தப்பட்ட மூன்று நாள் ஹர்த்தால் எதிர்வரும் இரு நாட்களுக்கு கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரால் நடத்தப்பட்டு வரும் இனப் படுகொலை மற்றும் நீதிக்குப் புறம்பான படுகொலைகளைக் கண்டித்து நேற்று முதல் மூன்று நாட்களுக்கு ஹர்த்தால் நடத்தபடும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது.

இதையடுத்து திருமலையில் நேற்றுக் ஹர்த்தால் முழுமையாக நடத்தப்பட்டது. இந்நிலையில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக முதல்வராகிறார் கருணாநிதி



(சென்னை)

தமிழ் நாடு சட்டப்பேரவையில் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழக கூட்டணி வெற்றி பெற்று அரசு அமைக்கிறது.


தமிழக சட்டப்பேரவையில் 234 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு கடந்த மே 8ஆம் நாள் நடைபெற்றது. வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இதில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. கூட்டணி163 இடங்களில் வென்றது.

கூட்டணி சார்பில் திராவிட முன்னேற்றக் கழகம் 96,காங்கிரஸ் கட்சி 34, பாட்டாளி மக்கள் கட்சி 18,இந்திய கம்யூனிஸ்ட்கட்சி 6, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 9 இடங்களைப்பெற்றன.

ஜெயலலிதா தலைமையிலான அண்ணா தி.மு.க.கூட்டணி 69 இடங்களில் வெற்றி பெற்றது. அக்கூட்டணி சார்பில் அண்ணா தி.மு. க.61 ,மறுமலர்ச்சி தி.மு.க.6, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 2 இவை தவிர தேசிய திராவிட முற்போக்கு திராவிடக்கழகம் 1 இடங்களைப் பெற்றன. தமிழ் நாடு சட்டப் பேரவைத் தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக எந்தவொரு கட்சிக்கும் ஆட்சியமைக்கத் தேவையான 117 தொகுதிகள் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் பெரும்பாலான இடங்களைப் பெற்றுள்ள தி.மு.க.கூட்டணியின் தலைவர் கலைஞர் கருணாநிதி (08 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் க.கா.குழுத்தலைவர் ஹெவ்டே காலமானார்



இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன் புறுாவ் ஹெவ்டே (வயது 67) நேற்று முன்தினம் நோர்வேயில் காலமானார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை-வன்னி-யாழ்ப்பாணத்தில் மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் திருகோணமலை , யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதியில் முப்படைகளாலும் நேற்று தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

திருகோணமலையின் மூதூர் கடற்கரைச் சேனை, சேனையூர் பகுதிகளை நோக்கி துறைமுகப்பகுதியில் இருந்து படையினர் தொடர் தாக்குதல் நடத்தினர்.

அதன் பின்னர் மாலை 5 மணியளவில் திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து ஆட்லறித்தாக்குதல் தொடர்ச்சியாக நடத்தப் பட்டது.

ஆட்லறி எறிகணைகள் சேனையூர் ,கடற்கரைச்சேனைப் பகுதிகளில் விழுந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. மக்கள் ஏற்கனவே படைத்தாக்குதலால் இடம்பெயர்ந்த காரணத்தால் இழப்புக்கள் ஏதுவும் ஏற்படவில்லை.

எனினும் சில குடும்பங்கள் அப்பகுதியில் மீளச்சென்று குடியமர்ந்துள்ளன. அவர்களின் நிலை என்னவென்பது தெரியவரவில்லையென அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறைச்சாலை அதிகாரிகளிடையே ஊழல்; நீதித்துறை அமைச்சு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் சிறைச்சாலை அதிகாரிகள் ஊழல் மலிந்தவர்களாக இருப்பதாக நீதித்துறை அமைச்சின் செயலாளர் சுகத கம்லத் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிறைச்சாலைகள் தலைவராக மேஜர் ஜெனரல் விஜேகுண வர்த்தன பொறுப்பேற்ற நிகழ்வில் பங்கேற்றுப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையின் சிறைச்சாலைகளில் குற்றவாளிகளைப் பார்ப்பதற்கு வருகைதரும் பார்வையாளர்களிடம் சிறைச்சாலை அதிகாரிகள் கையூட்டுப் பெறுகின்றனர். இது தொடர்பில் நாம் மிக அவதானமாகவே இருக்கிறோம் என்பதை அந்த ஊழல் அதிகாரிகளுக்கு எச்சரிக்கின்றோம்.

இத்தகைய அதிகாரிகளினால் ஒட்டுமொத்த சிறைச்சாலைத் துறையினரது மதிப்பும் சீர்குலைக்கப்படுகிறது. அதேபோல் வர்த்தகர்கள் மற்றும் வெளிநாட்டு சிறைக்கைதிகளுக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படுவது குறித்தும் அரசாங்கம் அறிந்துள்ளது. அதிகாரிகள் இப்படிச் செயற்படுவதற்கு சிறைச்சாலைகள் ஒன்றும் தனியார் உரிமம் பெற்றவை அல்ல. அரசாங்க சொத்துக்கள் என்றார் அவர்.

இந்நிகழ்வில் விஜேகுணவர்த்தன உரைநிகழ்த்துகையில், இலங்கையின் சிறைச்சாலைகளை அரச படையினர் போன்று ஒழுக்கம் நிறைந்த துறையாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒழுங்கீன நடவடிக்கைகள் அகற்றப்படும்.

அரசியல்வாதிகள் பலரும் சிறைச்சாலை ஆணையாளர் தவறுக்கு துணை போக வற்புறுத்துகின்றனர். ஆனால் நான் ஒரு இராணுவ அதிகாரி. இராணுவம் ஒரு ஒழுங்கமைந்த பிரிவு.

சிறைச்சாலை என்பதும் கூட ஒரு சிறிய இராணுவம் போன்றதே. இராணுவத்தில் 15ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை எனது தலைமையின் கீழ் சில மாதங்களுக்கு முன்னராக இயக்கிவந்தேன். இராணுவத்தினரது தரத்துக்கு சிறைச்சாலைகளையும் விரைவில் உருவாக்குவேன் என்றார். நீதித்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (க)

# இலங்கைச் சிறுவர்களை வெளிநாட்டவர்கள் தத்தெடுக்கும் கோரிக்கைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை சிறுவர்களை வெளிநாட்டவர்கள் தத்தெடுக்கும் கோரிக்கைகள் அதிகரித்து வருவதாக சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை தத்தெடுப்பதற்கான அனுமதியை வெளிநாட்டவர்களுக்கு வழங்குகையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்ட வழிமுறைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான சட்டத்தரணிகள் தயாரித்த நூலை கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுவைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்களினால் தத்தெடுக்கப்படும் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு கடந்த 10 வருடகாலமாக மேற்கொள்ளப்பட்ட அதிக எண்ணிக்கையான திருத்தங்களும் இந்த சட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

## இந்தியாவில் அகாசி...

இலங்கைக்கான ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி நேற்று முன்தினம் இந்தியா சென்றடைந்தார். இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் அரசதரப்பினரை சந்தித்துப் பேசிய பின்னர் இலங்கை நிலைமைகள் குறித்து விளக்குவதற்காக இந்தியாவுக்கு அகாசி சென்றுள்ளார்.

இந்தியா சென்ற அகாசி இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் மற்றும் வெளிவிவகார அமைச்சு செயலாளர் சியாம்சரண் ஆகியோரை நேற்று சந்தித்துப் பேசியதாக தெரியவருகின்றது. (க)

# ஐ.நா.ம.உ.ஆ.குழுவில் இலங்கை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடும் எதிர்ப்புக்களுக்கு இடையே இலங்கை இடம்பெற்றுள்ளது. நியுயோர்க்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இதற்கான தேர்தலில் இலங்கை தகுதிபெற்றுள்ளது.

இக்குழுவில் கடந்த முறை மொத்தம் 60 நாடுகள் இடம் பெற்றிருந்தன. தற்போது ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 47 நாடுகளைக் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் மையம் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமைகள் அமைப்பினர் இலங்கை ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இலங்கையின் நீதித்துறை பொலிஸ்சேவை மற்றும் மனித உரிமைகள் ஆணையம் அனைத்துமே ஊழல் மலிந்ததாகவும் செயலற்றதாகவும் உள்ள நிலையில் ஐ.நாவின் மனித உரிமைகள் குழுவில் இலங்கையை இடம்பெறச் செய்யக்கூடாது என்றும் அந்த அமைப்பினர் வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# உயர்தரப் பரீட்சைக்கு தே.அ.அட்டை அவசியம்;

## மீள் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள், கட்டாயமாக தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சையில் மோசடிகளை தடுக்கும் நோக்கிலேயே தேசிய அடையாள அட்டை அவசியமாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொண்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க சுட்டிக்காட்டினார்.

அவர் இதுபற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பெருமளவு மாணவர்கள் இன்னமும் அடையாள அட்டையை பெறமுடியாத நிலையில் உள்ளனர் என்று பெற்றோர்களும் மாணவர்களும் எமக்கு சுட்டிக்காட்டுகின்றனர்.

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு விசேட திட்டம் அமுலாக்கப்பட்டாலும் கூட விடுமுறை தினங்கள் அதிகம் காணப்படுவதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக மாணவர்கள் அழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடுகின்றது. எனவே தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்கும் விதிமுறைகளைத் தளர்த்த வேண்டியுள்ளது என்றார். (க-9)

# யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு விதைநெல் வழங்க நடவடிக்கை

இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கைக்கான யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வவுனியா விதைநெல் உற்பத்தி களஞ்சியத்தில் இருந்து நல்ல இன விதை நெல்லை பெற்றுக் கொடுப்பதற்கு கமநலத்திணைக்களத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏரி-402, ஏரி-351, வி பிள்யூ - 361 ஆகிய இனத்தைச் சேர்ந்த விதை நெல்லே வழங்கப்படவுள்ளது. விதை நெல் தேவையான விவசாயிகள் கமநல சேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு ஒரு புசல் நெல்லுக்கு முற்பணமாக முந்நூறு ரூபாவை செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று யாழ்.மாவட்ட கமநலத் திணைக்களத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொல்புரம் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் அப்பகுதி விவசாயிகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் நிலையத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். (க-9)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாஸநாத சுவாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட இரு இராஜ கோபுரங்களுக்கும் யூன் மாதம் 8ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

யூன் மாதம் 2ஆம் திகதி முதல் 4ஆம் திகதிவரை சுவாமிக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (க)

# அமைச்சர்களுக்கு குண்டு துளைக்காத வாகனம்

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு குண்டுதுளைக்காத வாகனங்களை அரசாங்கம் வழங்கியுள்ளது. இராணுவ தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்கு தலையடுத்து இந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, தலா 120 மில்லியன் ரூபா மதிப்புக்கொண்ட மெர்சிடிஸ் பென்ஸ் வாகனங்களை ஜேர்மனியிலிருந்து பெறுவதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வாகனங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனிய சரக்கு விமானம் மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளது என்றும் கூறப்படுகிறது. (க)

# தற்கொலை குண்டுதாரியின் கைத்தொலைபேசியிலுள்ள சிம்மை மீள் நிர்மாணம் செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு இராணுவ தலைமையகத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட பெண்ணின் கைத்தொலைபேசியிலுள்ள 'சிம்' மை மீள் நிர்மாணம் செய்வதற்காக வெளிநாடொன்றுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை இரகசியப் பொலிஸார் எடுத்து வருகின்றனர்.

குண்டு வெடித்த வேளையில் தற்கொலை குண்டுதாரிப் பெண்ணிடம் இருந்த கைத்தொலை பேசி வெடித்துச் சிதறியது. அதிலிருந்து சிம்மும் சிதறியதால் அதனை மீள நிர்மாணிக்கும் முயற்சிகளை இரகசியப் பொலிஸார் மேற்கொண்ட போதிலும் அம்முயற்சி பலனளிக்கவில்லையென தெரியவந்துள்ளது.

இதனால் சிம்மை திரும்பவும் பழைய நிலைக்கு கொண்டுவர தொலைபேசியை தயாரித்த நாட்டுக்கே அனுப்பிவைக்க இரகசிய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இராணுவ தளபதியை தாக்கிய சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேலும் முன்கொண்டு செல்வதற்கான ஒரே யொரு வழி குண்டு தாரியின் கைத்தொலை பேசியே என தெரிவிக்கும் இரகசிய பொலிஸார் அதில் பொருத்தியிருந்த சிம்மை மீள் நிர்மாணம் செய்யுமிடத்து மேலும் தகவல்களை அறிய முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (க-9)

# தெங்கு செய்கையாளர்களுக்கு மானிய உதவிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு தென்னை செய்கையாளர்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

தென்னை மீள் நடுகை, கிளிசெறியா, ஊடுபயிர்நாட்டல், பொச்சு மட்டை குழி ஆகிய செயற் திட்டங்களின் கீழ் தென்னை செய்கையாளர்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

தென்னை செய்கைகளில் ஈடுபடுவோர் கமநல சேவை நிலையங்களூடாக தொடர்பு கொண்டு மானிய உதவியை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாமென யாழ்.மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மீள் நடுகை திட்டத்திற்கு உதவியாக ஏக்கருக்கு 70 தென்னம் பிள்ளைகள் இலவசமாக வழங்கப்படவிருப்பதாகவும் கிளி செறியா ஊடு பயிர்த்திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு 900 கிளிசெறியா தடிகள் ஊடுபயிராக நாட்டப்பட்டு பராமரிக்கும் இடத்தில் ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

பொச்சு மட்டை குழி திட்டத்தின் கீழ் தென்னைப் பயிர்களுக்கு இடையே 8 அடி நீளம் 4 அடி அகலம் 2அடி ஆழம் கொண்ட குளிகள் வெட்டப்பட்டு ஒவ்வொரு குளிக்கும் 250 பொச்சு மட்டைகளுக்கு குறையாமல் தென்னை பொச்சு மட்டைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை அரை ஏக்கருக்கு குறையாத அளவில் தென்னைப் பயிர் செய்கையில் ஈடுபடுபவர்களே மானிய உதவியை பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும் என கமநல உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (க-9)

# இராசி பலன்

**12.05.2006**
**(சித்திரை 29, வெள்ளிக்கிழமை)**
**சதுர்த்தசி பிற்பகல் 12.03 மணிவரை**
**சுவாதி முன்னிரவு 8.41 மணிவரை**
**இராகுகாலம் 10.24-11.54 மணிவரை**
**சுபநேரம் 5.54-7.24 மணிவரை**
**சித்திரா பௌர்ணமி விரதம்**
**சித்திர குப்த விரதம்**

| | |
|---|---|
| மேடம் | மனோ தைரியம், மாதர் நட்பு, தேகநலன், காரிய அனுகூலம். |
| இடபம் | மனமகிழ்ச்சி, போசனசுகம், செய்தொழில விருத்தி, காரிய அனுகூலம். |
| மிதுனம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக்குறைவு, திடீர் நன்மை. |
| கடகம் | மனச்சஞ்சலம், தனவிரயம், தெய்வ சிந்தை, முயற்சி தாமதம். |
| சிங்கம் | மனோதைரியம், தெய்வதரிசனம், காரிய அனுகூலம், போசனசுகம். |
| கன்னி | போசனசுகக்குறைவு, காரிய இடையூறு, வாக்கு மேன்மை. |
| துலாம் | வெகுமானம், மாதர் நட்பு, சயன சுகம், புதிய முயற்சி. |
| விருச்சிகம் | சோமபல் நிலை, பிறருக்கு உதவுதல், தனவிரயம், சிந்தனை மிகுதி. |
| தனுசு | தனதானிய சேர்க்கை, மனமகிழ்ச்சி, நணபர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| மகரம் | பிரபுத்தனம், நன்கொடை, தெய்வதரிசனம் காரிய அனுகூலம் |
| கும்பம் | உத்தியோக பலிதம், தேசாந்திர வாசம், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு. |
| மீனம் | அஜீரணக்கோளாறு, கலகம், காரிய தடங்கல், தெய்வசிந்தை. |

- வளவன்

# சிங்கள ஊடகத்துறையினர் பேரினவாத சிந்தனையுடன் செயற்படுகின்றனராம்

## 'ராவய' பத்திரிகை குற்றச்சாட்டு

(கொழும்பு)

***இலங்கைத் தீவில் சிங்கள ஊடகத்துறையினர் பேரினவாத சிந்தனையுடன் செயற்படுகிற போக்கை சிங்கள வார பத்திரிகையான 'ராவய' கடுமையாகச் சாடியுள்ளது.***

இதுதொடர்பாக ராவய பத்திரிகையில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தலையில்லா 5 சடலங்கள் தெற்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தனது சேவை நீடிப்பினை எதிர்பார்த்திருக்கும் பொலிஸ்மா அதிபரின் கூற்றிற்கு அமைய தலையில்லா சடலங்கள் இருபாதாள உலகக் குழுவினரது வேலையாகும். அந்த துரதிருஸ்டவசமான நிலைக்கு முகம் கொடுத்திருக்கும் ஐவர் யாரென இதுவரை கண்டறிவதற்கு பாதுகாப்புப் படையினரால் முடியாதுள்ளது.

சிரசில்லா சடங்கள் இடத்திற்கிடம் கண்டுபிடிக்கப்படுவதானது சிறியதொன்று என்று ஒதுக்கிவிட முடியாத விடயமாகும். இதுபற்றி இந்நாட்டு ஊடகங்கள் மௌனம் சாதிக்கின்றன. இந்நாட்டின்பிரதான எதிர்க்கட்சியும் எதனையும் பேசுவதில்லை மனித உரிமை அமைப்புக்கள் தங்களின் வெளிநாட்டுத் தலைமையகங்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பது தவிர இலங்கையில் வாய்திறந்து ஒரு வார்த்தையேனும் பேசுவது கிடையாது.

மனித உரிமைகளுக்கான பண்டிதர்கள் அனைவரும் தற்போது அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டு அல்லது பதவிகளைப்பெற்றுக்கொண்டு அரசாங்கத்துடன் தொற்றிக் கொள்ளப் பார்ப்பதால் தலையில்லா சடலங்களின் உரிமைகள் பற்றி ஆர்ப்பாட்டம்செய்யவோ ஊர்வலங்கள் செல்லவோ யாரும் முன்வருவதில்லை. அவர்கள் அதிக பிரபல்யத்தை நாடாது அமைதியாக இருந்து வருகின்றனர்.

முந்நூறுக்கும் மேற்பட்ட மக்களுக்கு மரணத்தை ஏற்படுத்திய கௌரவமான சமாதானத்தை ஒரு புறும் வைக்கவும், கிளைமோர் குண்டுகளுக்கோ வேறு எந்தவொரு ஈயப்பொருளுக்கோ பலியாகும் உயிர்களை ஒரு புறம் வைக்கவும் தெற்கில் தோன்றியிருக்கும் தலையில்லா சடலங்கள் பற்றி ஒரு வார்த்தையேனும் பேச முடியாத அளவிற்கு இந்நாட்டின் அனைவரும் செயலிழந்து போயுள்ளனர்.

புத்தாண்டிற்கு அமெரிக்காவிற்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் இதுவரை நாடு திரும்பவில்லை. ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இல்லாத போது எதனைப் பற்றியும் பேசுவதற்கு தற்போது ஐக்கியதேசியக்கட்சியில் எவரும் இல்லாதது போன்றேயுள்ளது. இதனைப் பார்க்கும் போது ஐக்கிய தேசியக்கட்சியில் மட்டுமல்ல ஏனைய கட்சிகளும் கலைத்துப் போடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

*தலையில்லா சடலங்கள் பற்றி ஜே.வி.பிக்கு தெரியும்*

தலையில்லா சடலங்களை பற்றி நன்றாக அறிந்தவர்கள் ஜே.வி.பி.யினரே, பேராதெனிய பல்கலைக்கழக சுற்றுவட்டத்திலும் வெலிமட நுவரெலியா பாதையிலும் 1989ஆம் ஆண்டு ஜே.வி.பி உறுப்பினர்கள் இந்நிலைக்கு ஆளாகியிருந்தனர். அன்று உடல் இல்லாது தலை மாத்திரம் இருந்தது. இன்று தலையில்லாது உடல் மாத்திரம் உள்ளது. அன்று உயிர் நீத்தவர்களை வருடத்தில் இருமுறை நினைவு கூர்ந்து நிகழ்வுகளை நடத்தும் ஜே.வி.பிக்கு இன்று தலையில்லா சடலங்கள் பற்றி கதைப்பதற்குக்கூட மனமில்லாதுள்ளது.

றோயல் பார்க் அழகியின் படுகொலை பற்றி பத்திரிகைகளில் எழுதி பல பக்கங்களை நாளாந்தம் நிரம்பும் ஊடகவியலாளர்களும் இன்றைய தலையில்லா சடலங்கள் பற்றி பொலிஸ்மா அதிபர் கூறுபவற்றை மட்டுமே எழுதுகின்றனர். அதனைப்பற்றி அதிகம் கதைத்தது மலையக மக்கள் மன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனே அவர் சர்வகட்சி மகாநாட்டில் மஹிந்தவின் முன்னிலையில் இதனைப்பற்றி கதைத்தது கூட பத்திரிகைகளுக்கு முக்கியமாகப்படவில்லை.

அதற்குப் பதிலாக மறுநாள் இரவு சந்திரசேகரனின் ஊடகப் பிரிவுச் செலாளரும் மலையக மக்கள் முன்னணியின் ஊடகப் பொறுப்பாளருமான ஹென்றி விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார். திருட்டுத் தேங்காய் பறித்து கைதுசெய்யப்படுபவர்களுக்கு பத்திரிகைகளில் கிடைக்கும் இடம் கூட விக்கிரமசிங்கவின் கைது பற்றிய செய்திக்குக் கிடைக்க வில்லை.

பத்திரிகைகளூடர்க பொலிஸாரின் போதைப்பொருள் மாபியாவின் கோட் பாதர் என வர்ணிக்கப்படும் அதிகாரிக்கு எதிராக சாட்சிகள் இல்லாததால் விடுதலையானமை செய்தியாவதில்லை. உண்மையான மாபியாவிற்கு சவால் விடுக்கும் நேரம் அவரும் மனைவியும் படுகொலை செய்யப்படுகின்றனர். பின்னணியில் இருக்கும் கதைகள் தெளிவாகின்றன.

இவ்வாறான பின்னணியிலேயே தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குதலுக்கான உரிமை பற்றி கூறப்படும் உலக பத்திரிகை சுதந்திரதினம் பெரிய அளவில் கொழும்பில் கொண்டாடப்பட்டு கொழும்பு பிரகடனத்தில் கையெழுத்திடப்படுகிறது.

*ஏப்ரல் –மே மாதங்களில் ஊடகங்களுக்கு கெட்டகாலம்*

ஏப்ரல்–மே மாதங்கள்எப்போதும் இலங்கை ஊடகங்களுக்கு கெட்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. கலைஞர்களுக்கு இது கெட்ட காலமே. ரோகண குமார கொல்லப்பட்டதும் இவ்வாறான காலப் பகுதியிலேயே இன்று யாழ்ப்பாணத்தில் வெளி பாகும் தினசரிப் பத்திரிகை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பத்திரிகை சுதந்திரம் அல்ல உயிர்வாழ்வதற்கான சுதந்திரம் கூட இல்லாது போயுள்ளது. ஊடக சுதந்திரம் பற்றி உலகிற்கு எடுத்துக்கூறு வதற்கு அருகிலிருக்கும் உதாரணத்தைவழங்கியிருப்பது இலங்கை யாகும்.

நிமலராஜன், சிவராம், ரமேஸ், பாலராஜ் போன்ற அனேகமான நல்லவர்களைக் கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்காத நாட்டில் ஊடக சுதந்திரத்திற்காக மாகா நாடொன்றை நடத்தி பத்திரிகையில் புகைப்படமொன்றை போட்டுக் கொள்ளும் சுதந்திரம் இந் நாட்டு ஊடகவியலாளர்களுக்கு, ஊடக அமைப்புகளுக்கு கிடைத்துள்ளது.

ரிச்சர்ட், ரோகண, தேவிஸ் குருகே, பிரேமகீர்த்தி, குலசிறி, சரத் போன்றவர்கள் கொலை செய்யப்பட்டதற்கு இதுவரை நியாயம் கிடைத்துள்ளதென கூற முடியுமா?

பத்திரிகை தொழிலால் உயிரிழந்த ஆனந்த மெண்டிஸ், கே.பி.உபசேன, ஜினசேன கஸ்தூரியாராச்சி ஆகியோரின் பெயரைக் கூட அறியாதோர் எத்தனை [illegible] இந்நாட்டில் இருப்பார்கள்? [illegible]ரை, கோட் அணிந்து கொண்டு கருத்துக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு இருக்கும் சுதந்திரம், சுதந்திரம் பற்றிய உரைகளை நிகழ்த்துவோர் வெளியில்வந்து திரைப்படமொன்றை உருவாக்கிய மைக்காக ஒருவரை சிறைக்கு அனுப்புவதற்கு முயல்கின்றனர்.

உதயன் பத்திரிகை காரியாலயத்திற்கு வந்து கண்முடித்தனமாக துப்பாக்கிச் சூடு செய்து இருவரைக் கொலைசெய்து அங்கிருந்த கணனிகளையெல்லாம் அடித்து நொறுக்கி மேலும் சிலரை காயப்படுத்திவிட்டு கொலையாளிகள் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்த சம்பவம் யாழ்.நகரின் மத்தியில் நிகழ்ந்துள்ளது. விடுதலைப்புலிகளுக்கு உதயன் ஆதரவானதென்பது உண்மையாக இருக்கலாம் கொழும்பு ஊடகங்களும் ஒவ்வொரு வருக்கு ஆதரவாகவே உள்ளன. அவர்களின் எதிராளிகளும் இவ்வாறு பத்திரிகை காரியாலங்களைத் தாக்க முயன்றால் பெரும் குழப்பமே ஏற்படும்.

யுத்தம் ஊடகத்தை சிக்கலாக்கியுள்ளது. ஊடகம் சமூகத்தை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது. தலையில்லா சடலங்கள் பற்றி எதனையும் பேசாத ஊடகங்கள் மீதுதாக்குதல் நடத்தப்படுகையில் அவர்களைக் காப்பதற்கு யாரும் வருவார்கள் என நம்பிக்கை வைக்க முடியுமா? அதுவும் சரியாக தேர்தல் காலத்தில் மட்டும் உலகையே தருவதற்கு அழைக்கும் அரசியல் கட்சிகளுக்கு மக்கள் மாகாண சபைகளின் அதிகாரத் தைக்கூட தருவதற்குத் தயாரில்லாத நிலையைப் போன்றதே.

அனைத்துத் தமிழ் ஊடகங்களிலும் இந்த தலையில்லா சடலங்கள் பற்றிய செய்தி புகைப்படத்துடன் வெளியாகியது. தமிழ் பத்திரிகைகள் அந்த செய்திக்கு முக்கியத்துவம் அளித்து அந்த தலையில்லா சடலங்களின் வாணப் புகைப்படங்களுடன் வெளியிட்டிருந்தன.

*முண்டங்கள் பற்றி டெய்லி மிரர் மட்டுமே செய்திவெளியிட்டது.*

கொழும்பில் வெளியாகும் ஒரு சிங்களப் பத்திரிகையேனும் அந்த புகைப்படத்தினை வெளியிடவில்லை. அந்த செய்திகூட முக்கியமற்ற வகையிலேயே பிரசுரிக்கப்பட்டிருந்தது. கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளின் அந்த கொடிய செயலுக்கு உரிய இடமளித்து டெய்லி மிரர் பத்திரிகை மாத்திரமே செய்தி வெளியிட்டிருந்தது.

ஐந்து தலையில்லா நிர்வான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட செய்தியை முக்கியமான செய்தியாக சிங்களப் பத்திரிகைகள் கருதாதது ஏன்? தமிழ் பத்திரிகைகள் அந்த செய்தியை முக்கிய செய்தியாகக் கருதி புகைப்படத்துடன் வெளியிட்டது ஏன்?

இலங்கையின் ஊடகப் பயன்பாட்டை அறியும் யாரும் இந்த சம்பவத்தை இவ்வாறே பார்ப்பார்கள் கொல்லப்பட்டுள்ளவர்கள் தமிழர்கள் என சிங்கள மற்றும் தமிழ் ஊடகத்தினர் அநுமானித்திருப்பார்கள். சிங்களப் பத்திரிகைகள் அந்த செய்தியை மறைத்தது அந்த புகைப்படங்களை பிரசுரிக்காது விட்டது சிங்கள வாசகர்களுக்கு இவ்வாறு தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்படுவதனைப் பற்றி அறிவதற்கான தேவை இல்லையென கருதியே. இந்த பயன்பாடானது இன ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தணிக்கையாகும்.

தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை சிங்களவர்களிடமிருந்து மறைத்து வைப்பது சிங்கள ஊடகங்களின் நீண்ட நாள் பழக்கமாகும். அண்மைய காலங்களில் வெளியான சிங்களப் பத்திரிகைகளில் சும்மாவேனும் வடக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு அநாதரவாகியுள்ளவர்களைப் பற்றி வாசித்திருக்கிறீர்களா என்பதை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.

ஊடகங்கள் ஒருதரப்பு அல்லது ஒருதரப்பிற்கு மட்டும் உரியதென காண்பிக்கும் வகையில் செய்திகளை வெளியிடலாகாது மறுபுறம் செய்தி வெளியிடுவதற்கென பல கருத்துகள் இருப்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் ஊடகங்களில் புகைப்படங்களை வெளியிடுவது சம்பந்தமான அடிப்படை வழிகாட்டல்களை கவனத்தில் எடுக்காது தலையில்லா சடலங்களைக் கொண்ட புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அதுவும் தவறென்பதை சுட்டிக்காட்ட வேண்டும் அவை பிரசுரிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளபோதிலும் ஒன்றில் கறுப்புவெள்ளை புகைப்படத்தினை பிரசுரித்திருக்கலாம் இல்லையேல் உடம்பை மறைத்து தலையில்லா சடலம் என்பதை காண்பிக்கும் வகையில் மாத்திரம் வெளியிட்டிருக்கலாம். புகைப்படம் வெளியிடுதல் சம்பந்தமாக ஏமது அனேகமான பத்திரிகைகளுக்கென ஒழுங்குவிதிகள் உள்ளன.

நாட்டில் தற்போது நிகழ்ந்து வரும் விடயங்கள் நாட்டின் ஜனாதிபதிக்கோ அரசாங்கத்திற்கோ கௌரவத்தை ஏற்படுத்துவதாக இல்லையென கூறவேண்டும்.

*பொலிஸ்மா அதிபரின் சதி*

கடந்த 27ஆம் திகதி ஐந்து தலையில்லா சடலங்கள் அவிசாவளையில் கண்டுபிடிக்கப்பட்டன. இனப்பிரச்சினைக்கும் அந்த சடலங்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென்றும் அது பாதாள உலகக் குழுவின ரால் செய்யப்பட்ட குற்றங்கள் என்றும் அதுபற்றிய ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் சர்வ கட்சி மகாநாட்டில் அறிவித்துள்ளார்.

எனினும் தற்போது அவற்றில் நான்கு சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த நான்கு சடலங்களும் தமிழர்களுடையதே இதுபற்றி பொலிஸ்மா அதிபர் கூறியதில் எவ்வித உண்மையும் இல்லை யென்பது இதன் மூலம் தெரிகிறது. இன்று நாட்டின் பெருந்தெருக்களில் போடப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக் கமைய எந்தவொரு குற்றவாளிக் கும்பலுக்கும் தலையில்லா சடலங்களை சுதந்திரமாக கொண்டு செல்வதற்கு வாய்ப்பில்லை.

மறுபுறம் குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பலுக்கு ஆட்களைக் கொலை செய்ய வேண்டிய தேவையிருநதாலும் அவர்களின் தலையைத் துண்டித்து அவற்றை மறைத்து வைத்து சடலங்களை மாத்திரம் காட்சிக்கு வைக்கும் தேவை இருக்க முடியாது. இதுவரை கண்டறியப்பட்டுள்ளதன்படி கொலை செய்யப்பட்டவர்கள் ஆமர் வீதி வத்தளை, வெள்ளவத்தை மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களாவர்.

இதற்கு முன்னர் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொலை செய்யப்பட்டமையும் மிகவும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டதாக அதுபற்றிய விசாரணைகளில் தெரியவந்தது. அதில் சம்பந்தப்பட்ட சில விசேட அதிரடிப்படை வீரர்கள் மஹிந்தவின் உத்தரவிற்கமைய கைதுசெய்யப்பட்டனர்.

எனினும் அந்த படைவீரர்கள் அவ்வாறு செய்தது அவர்களுக்கு அவ்வாறுசெய்யவேண்டியதேவைக் காவன்று அவ்வாறு செய்யுமாறு அவர்களின் உயர்மட்டத்தில் இருந்தவர்களினால் அவர்களுக்கு கிடைத்த உத்தரவினாலேயே செய்தார்கள்.

உத்தரவிட்டவர்களை சுதந்திரமாக நடமாடவிட்டு உத்தரவை செயற்படுத்தியவர்களுக்கு எதிராக மாத்திரம் சட்டத்தை அமுல்படுத்துவது நியாயமாக அமையாது. உலக ஊடக சுதந்திர தினம் இலங்கையில் கொண்டாடப்படும் வேளை உதயன் பத்திரிகை காரியாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஐவர் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவத்தால் நாட்டிற்கும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு மிகப் பெரியதாகும். இவ்வாறான நிலைமைகளை வளரவிட்டால் நாடு அராஜகம் மிக்க நிலையை எட்டும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று அதில் கூறப்பட்டுள்ளது. (க)

## தாதியர்களை நியமிக்க நடவடிக்கை

ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு தாதியர்களை சேர்த்துக் கொள்ளுதவற்கு சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்துள்ளது. புதிதாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ள தாதியர்களுக்கு மேற்கத்திய வைத்திய சிகிச்சை முறை குறித்தும்பயிற்சிகள் வழங்கப்படு மென்று சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ சரலியத்த தெரிவித்துள்ளார்.

முதல்கட்டமாக200பேர்சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர் பயிற்சிகளுக்குப் பின்னர் இவர்கள் ஆயுள்வேத வைத்திய சாலைகளில் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (க-9)

## இன்று ஒரு தகவல்

# சாப்பிடுவது எப்படி

ஒருவர் வந்தார். "உங்களிடம் ஒரு விபரம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று வந்திருக்கிறேன் உங்களுக்குத் தான் அது நன்கு தெரிந்திருக்கும் என்பது எனது நம்பிக்கை" என்றார். எனக்கு மிகவும் பெருமையாக இருந்த்து. "சரி..., கேளுங்கள் என்றேன் சாப்பிடுவது எப்படி?" என்றார். நான் ஒரு மாதிரி ஆகி விடடேன் "ஏன் சார் இதைக்கேட்பதற்காக இவ்வளவு தூரம் வந்தீர்கள்? என்றேன் "ஆமாம்... நீங்கள் அதைப் பற்றி எங்காவது படித்திருப்பீர்கள் அல்லது கேள்விப்பட்டிப்பீர்கள் அதனால் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன் என்றார்.

சரி இப்படி வந்து உட்காருங்கள் நமது முன்னோர்கள் சில முறைகளைச் சொல்லிவைத்திக்கிறார்கள் அதைச் சொல்கிறேன் என்று ஆரம்பித்தேன் விஞ்ஞானிகள் சொல்லும் செய்தி என்னவென்றால் அது காரண காரியத்துடன் இருக்கும் ஏன் எதற்கு என்று கேட்டால் அதற்குப் பதில் இருக்கும் இது முன்னோர்கள் சொன்னது என்பதனால் ஏன்? எப்படி? எதற்காக என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது அதெல்லாம் அனுபவத்தில் சொல்வது அதனால் பேசாமல் கேட்டுக்கொண்டிருப்பது தான் நல்லது.

சரி அவர்கள் என்ன சொல்கின்றார்கள்? சாப்பிடுவதற்கு முன்பு கை,கால்,முகம் கழுவவேண்டும். இன்று நம்மில் எத்தனை பேர் இதைச் செய்கிறோம்? நின்று கொண்டு சாப்பிடக்கூடாது. கட்டில் மீது உட்கார்ந்து கொண்டு சாப்பிடக் கூடாது. படுத்துக்கொண்டு சாப்பிடக்கூடாது. படுத்துக்கொண்டு கூடசாப்பிடுவார்களா என்று கேட்காதீர்கள் சிலர் அப்படியும் சாப்பிடுவது உண்டு.

சாப்பிடும் போது முதலில் இனிப்பைச்சாப்பிடுங்கள் கடைசியில் கசப்பைச் சாப்பிடுங்கள் மற்ற சுவைகளை நடுவில் சாப்பிடுங்கள் சாப்பிடும் போது தண்ணீர் குடிக்க வேண்டாம் விக்கல் எடுத்தால் மட்டும் தண்ணீர் குடிக்கலாம் சாப்பாடு சூடாக இருக்கும் போதே சாப்பிடுங்கள் நமது உடம்புக்கு எது ஒத்துக்கொள்கிறதோ அதைச் சாப்பிடவேண்டும் நமது உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாத எதையும் சாப்பிடக்கூடாது.

சாப்பிடும்போது அனுபவித்து சுவைத்துச் சாப்பிட வேண்டும். சிலர் சாப்பிட ஆரம்பிக்கும் போதுதான் பேசவும் ஆரம்பிப்பார்கள் அது மிகவும் தப்பு சாப்பிடும்போது பேசக் கூடாது, அரட்டை அடிக்கக்கூடாது, சிலர் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே சாப்பாட்டைப்பற்றிக் குறை கூறாமல் அவர்களால் சாப்பிட முடியாது ."இதை மனிதன் சாப்பிடுவானா" என்ற சொல்லிக்கொண்டே அவ்வளவையும் சாப்பிட்டு முடித்து விடுவார்கள் அது சரியில்லை இது சரியில்லை என்று சொல்லிக் கொண்டேதான் சிலர் சாப்பிடுவார்கள் ஆகா எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று சொல்லியபடி சாப்பிடுபவர்கள் மிகவும் குறைவு சாப்பிடும்போது சாப்பாட்டைக் குறை சொல்லாமல் சாப்பிடுவது ஒரு நல்ல பண்பு.

மிகவும் கோபத்தில் இருக்கிறீர்களா? அல்லது மிகவும் துன்பத்தில், கவலையில் இருக்கிறீர்களா? அப்படியான நேரங்களில் சாப்பிடக்கூடாது எப்போது சாப்பிட்டாலும் பாதிவயிறு சாப்பாடு கால் பாகம் தண்ணீர் மீதி பாகம் காலியாக இருக்கவேண்டும் வயிறு நிறைய சாப்பிடுகிறேன் என்று கூறுவது தவறு. இரவில் சாப்பிட்ட பின்பு உடனே படுத்துவிடக்கூடாது கொஞ்ச தூரம் நடக்கலாம் இல்லாவிட்டால் உட்கார்ந்திருக்கலாம். அப்போது தான் உணவு சமிபாடடையும்.

சாப்பிடஉட்காருகிறீர்களா அதற்கு முன் உங்களுககுப் பசிக்கிறதா என்று யோசித்துப்பாருங்கள் "பசி எடுத்த பின்பு கையை வாய்க்குக் கொண்டு செல்பவனும் பசி அடங்குவதற்குள் கையை வாய்க்குள் இருந்து விலக்கிக்கொள்பவனும் நோய் வாய்ப்படமாட்டான்" என்பது பெரியோர் வாக்கு சாப்பிட்டது. சமிபாடடைந்துவிட்டதா? அதன்பின் சாப்பிடு உனக்கு நோயே வராது என்கிறார் வள்ளுவர்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

இவ்வளவையும் கவனத்தில் வைத்துக்கொண்டு சாப்பிட்டால் எப்போதும் கவலையே இல்லாமல் வாழலாம் ஆனால் பலர் அப்படி இல்லை சாப்பிடும் போது அடிப்படைவிஷயம் கையைக் கழுவிக் கொண்டு சாப்பிடஉட்கார வேண்டும் இதைக் கூட பலர் செய்வதில்லை.

ஒரு அம்மா கவலையோடு சென்னார் என் மகன் சாப்பிடுவதற்கு முன்பு கையைக் கழுவமாட்டேன் என்கிறான் என்றார். அதற்கு இன்னொரு அம்மா அது பரவாயில்லை என் மகன் சாப்பிட்ட பின்பும் கையைக் கழுவ மாட்டடேன் என்கிறான் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பேச்சுக்கள், போர்கள் மூலம் விடுதலைப்புலிகளே வெல்வர்!

## என்கிறார் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

இனப்பிரச்சினையில் பேச்சுக்கள் மூலமும் போரின் மூலமும் விடுதலைப் புலிகளே வெற்றி பெறுவார்கள் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

மகரகம இளைஞர் மையத்தில் நடைபெற்ற பொதுக் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார் அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களானது இந்த நாட்டை பிளவுபடுத்தும் ஆகையால் பேச்சுக்களின் மீது நம்பிக்கை கொள்ளாமல் அரசாங்கத்தின் கடைசி மற்றும் சாத்தியமான வழியாக போரைத்தான் தொடங்க வேண்டும்.

பேச்சுவார்த்தைகளை நடத்தினால் ''சூடான்'' தீர்வினூடாக விடுதலைப் புலிகள் ஈழத்தை வென்று விடுவார்கள் மேலும் யுத்தம் நடத்தினாலும் 'சைப்ரஸ்' தீர்வினூடாகவும் ஈழத்தை அவர்கள் வென்றுவிடுவார்கள்.

இலங்கையில் இத்தகைய நிலைமை நீடித்தால் சர்வதேச சமூகம் தலையிட நேரும் என்று ஜப்பானின் சிறப்புத்தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்துள்ளார். மேலும் ஐ.நா. அமை திப் படையை அனுப்ப வேண்டும் என்றும் அவர் கூறியிருப் பதன் மூலம் இந்த நாட்டில் அரச கட்டுப் பாட் டுப் பகுதி மற்றும் விடுதலைப் புலிக ளின் பகுதி என இருபிரதேசங்கள் உருவாக்கப்பட்டு விடும்.



போருக்கு அப் பால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. ஒரே நாடு என்ற இலட்சியத்துக்காக மக்கள் எதற்கும் முகம் கொடுக்க மனோரீதியாகவும் உடல் ரீதியாகவும் தயாராகவேயுள்ளனர். தனிநபர்க ளது செயற்திட்டங்களை முன்னேடுத்துச்செல் வதற் கான நேரம் இதுவல்ல. அரசியல் வேறுபாடுகளை களைந்து இணைந்து செயற்படவேண்டிய காலம் இது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜாபக்ஷவை கடந்த திங்கட் கிழமை காலை சந்தித்த போது ஜனாதிபதி போரைத் தொடங்கவுள்ளதாகஒப்புக்கொண்டுள்ளார்என்றும்மேலும் சுட்டிக்காட்டினார். (க)

# சம்பூரில் தமிழர்கள் மீது குண்டு வீச்சு நடத்தவில்லை என்கிறது அரசாங்கம்

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூர் பகுதியில் தமிழர்கள் மீது குண்டு வீச்சு நடத்தப்படவில்லை என்று அரசாங்கம் விளக்கம் அளித்துள்ளது.

இலங்கையில் அரச பயங்கரவாதம் மற்றும் இனப் படுகொலை தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அரசாங்கம் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தார்.

இதற்கு அரசாங்கம் தரப்பில் பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, " தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களது அறிக்கை எமக்கு அதிர்ச் சியளிறது.

அரசாங்கம் மீது அரச பயங்கரவாதம் மற்றும் இனப் படுகொலை குற்றச்சாட்டுக்களை சுமத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதச் செயல்களை நியாயப்படுத்துகிறார்கள்.

எந்த வகையிலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது பொதுமக்களை கேடயமாகப் பயன்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மௌனம் சாதிக்கின்றனர்.

அரச படைகள் மீதான கிளைமோர்த் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மௌனமே சாதித்து வருகின்றனர்.

சம்பூர் பகுதியில் தமிழ் மக்கள் மீது குண்டுத் தாக்குதலை அரசாங்கம் நடத்தவில்லை.

சிங்களவர்களைத் தாக்கி ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்வது எமக்கு வருத்தமளிக்கிறது அப்பாவி பொதுமக்களின் மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் அவிசாவளையில் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினது அறிவுத்தலுக்கமைய அரசாங்கம் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது" என்றார். (க-9)

# அமைதி முயற்சிகள்தொடர்ந்தால் அரசாங்கத்துடன் இணைவோம்!

## ரவூப் ஹக்கீம்தெரிவிப்பு

(கொழும்பு)

அமைதி முயற்சிகள் தொடர்ந்தால்தான் அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணையும் என்று அக்கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்திருந்த ஜப்பானிய சிறப் புத்தூதுவர் யசூசி அகாஷியை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் ஹக்கீம் கூறுகையில்,

அமைதிப்பேச்சுக்கள் நடத்தும் போதே பிரதான எதிர்க் கட்சி மற்றும் கடும்போக்குக் கட்சிகளுடன் இணைந்து அரசாங்கம் இணக்கப்பாடு ஒன்றை உருவாக்கவேண்டும்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ நகர்வுகளை மேற்கொள்வார் என்று நம்புகிறோம். எதிர் வரும் வாரங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் பேச்சுக்கள் நடாத்தும் என்று அகாஷி எம்மிடம் நம்பிக்கை தெரிவித்தார்.

முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்தும் போரைத் தவிர்க்க வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அகாஷியிடம் வலியுறுத்தப்பட்டது. முஸ்லிம்கள் முகம் கொடுத்த பல்வேறு கடந்த கால சம்பவங்களை நாம் விளக்கினோம் இலங்கையில் யுத்தம் மீண்டும் உருவானால் அது மக்களின் பாதுகாப் புக்கும் பொருளாதாரத்துக்கும் பாரிய பாதிப்பை ஏற் படுத்தும்

இரு இனங்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ள் வேண்டும் என்பதையும் அகாஷியிடம் நாம் வலியுறுத்தினோம் என்றார். (க)

# தற்கொலைக்குண்டுதாரி உயிருடன் இருக்கிறார்?

(கொழும்பு)

லெப் ஜெனரல் சரத்பொன்சேகா மீதான தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடையதாக அறிவிக்கப்பட்ட நபர் உயிருடன் இருப்பதாக குற்றப்புலாய்வாளர் ஒருவரை மேற்கோள்காட்டி லங்கா நியூஸ் என்ற சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் 8 அடையாள அட்டைகள் காணப்பட்டதாகவும் அவற்றில் வவுனியாவைச் சேர்ந்த அனோஜா குகேந்திராசா என்பவருடைய அடையாள அட்டையும் உள்ளடங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடையாள அட்டைகள் மீட்கப்பட்டதையடுத்து வவுனியாவுக்கு விரைந்த குற்றப்புலனாய்வு அதிகாரிகள் அங்கு இது குறித்து விசாரணைகளை நடத்திய போது தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் பெண் உயிருடன் இருப்பதாகவும் வெடிகுண்டுத் தாக்குதலுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளதாகவும் குறித்த இணையத்தளம் வெளிளிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## வடக்கு–கிழக்கில்

# உயர் தரப் பரீட்சை திட்டமிட்ட படி நடக்கும்

(கொழும்பு)

வடக்கு–கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி திட்டமிட்டபடி கல்விப் பொதுத்தரதார உயர்தரப் பரீட்சை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தவிடயம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இதற்கமைய வடக்கு கிழக்கு மாகாணத்தில் 230 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும்,

இப்பரீட்சை நிலையங்களுக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பு வழங்க சம்மதித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# நெல்சன் மண்டேலா

## மீள்பார்வை

த. பாண்டியன்



### எல்லை தாண்டி

39

இயேசுநாதர் பிறப்பதற்கு முன்னரேதற்போது எதியோப்பியா என்று அழைக் கப்படும் நாடு அபீசினியா என்று அழைக்கப்பட்டு வந்தது. இது சுலமான் மன்னருக்கும் சீபா ராணிக்கும் பிறந்த மகனால் நிறுவப்பட்ட நாடு எனச் சொல்லப்படுகிறது முசோலினி எதியோப்பியாவை 1930 இல் ஆக்கிரமித்தான் அப்பொழுதிலிருந்தே முசோலினி மீதும் பாசிஸ்டுகள் மீதும் மண்டேலாவுக்கு வெறுப்பு இருந்துவந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஹெய்லி சலாசி எத்தியோப் பியாவின் தலைவர் ஆனார்.

அடிஸ் அப்பா நகருக்கு வந்தபோது அதன் தோற்றம் ஏமாற்றம் தருவதாக இருந்தது மன்ன ரின் அரண்மனை, பல்கலைக்கழகம், ஓரிரு விடுதிகள் தவிர பெரிய கட்டங்களைக் காணோம். ஒரு சில சாலைகளில் தார் பூசப்பட்டு இருந்தது வாகனங்களை விட ஆடு, மாடு என்ற கால் நடை களே அதிகம் காணப்பட்டன எதியோப்பியா ஜனநாயகத்திற்கு உதாரணமாகக் காட்ட முடியாத நாடு.

மாநாடு படைவீரர்களின் அணிவகுப்போடு தொடங்கியது சக்கரவர்த்தி சலாசியும் சாதாரண நடுத்தர உயர மனிதராகத் தோன்றினார்.

கருநிற படைவீரர்கள் அணி வகுக்க, கருப்புத் தளபதிகள், ஆணையிட கருப்பு தலைவர்கள் கைதட்ட சுதந்திரமான மக்களின் அணிவகுப்பு தெரிந்தது.

மாநாட்டில் சக்கரவத்தியின் திறப்பு விழா உரையைத் தொடர்ந்து அடுத்ததாக மண்டேலாவைப் பேசஅழைத்தனர். பல மாதங்களாக பல பெயர்களில் நடமாடிய மண்டேலா, முதல் தடவையாகயாக பல நாட்டுத் தலைவர்கள் முன்னர் நெல்சன் மண்டேலாவாக நின்றார். ஆபிரிக்கா மக்கள் நடத்திய வரும் சுதந்திரப்போராட்ட வளர்ச்சியைக் கூறிய மண்டேலா சொந்த நாட்டிலேயே சட்ட விரோதியாக அறிவிக்கப்பட்ட மனிதனாக ஓடவேண்டியதாகிவிட்டது.

'தன் நாட்டு மக்களுக்கு தேவையான சரியான போராட்ட முறையை உருவாக்க முடியாத தலைமை துரோகம் செய்வதாகவே க்ருதுவோம். எனவே தான் ஆயுதமேந்தி விட்டோம் அதன் தொடக்கமே டிசம்பர் 16 -குண்டு முழக்கம் . என் நாட்டுமக்களுக்கு கொடுத்துள்ள வாக்குறுதிப்படி என் தாய் நாட்டிற்கே திரும்பிச் சென்று தொடர்ந்து போராடுவேன்' எனப் பெரும் கரவொலிக் கிடையே பேசினார்.

ஜூலியன் நைரேயும் கென்ன காண்டாவும், ஆபிரிக்க விடுதலை இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமை இல்லாதிருப்பது குறித்துக் கவலையைத் தெரிவித்தனர். கென்னத் காண்டா மூத்த அரசியல்வாதி. தென் ஆபிரிக்க தேசிய காங்கிரசில் அங்கம் வகித்தவர். இருந்தும் சுத்த ஆபிரிக்கா காங்கிரசையே அதிகம் மதிப்பதாகத் தெரிந்தது. ஆபிரிக்கா தேசிய காங்கிரஸின் செய்திகள் எட்டாததும் ஒரு காரணம் மேலும் வெள்ளை நிறக் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக்கொண்டு இருப்பதும் தவறு என்றார். கம்யூனிஸ்டுகளைப் பற்றிய சந்தேகம் மேற்கத்திய நாடுகளில் மட்டுமல்லாது, ஆபிரிக்காவிலும் பரவலாக இருந்தது. எங்கு சென்றாலும் கம்யூனிஸ்டுகளைப் பற்றி எச்சரித்துக்கொண்டே இருந்தார்கள் கென்னத்காண்டா நெல்சன் தோளைப் பிடித்து பேசியதற்காகப் பாராட்டிவிட்டு சுத்த ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் இணைந்து போக புத்திமதி சொன்னார்.

தான் லுதிலியின் சீடன் என்றும் கட்சியின் ஆதரவாளன் என்றும் சைமன் காப் -வெப்வே என்பாரை சந்திக்கச் சொன்னார். அவர் அங்கிருந்த கட்சியின் செயலாளர் ஆலிவர் வெள்ளையர் எனவே சைமனைச் சந்திக்க மண்டேலாவை தனியே அனுப்பி வைத்தார். சைமனுடன் ஒரு நாள் முழுவதும் மண்டேலா பேசிய பிறகு சைமன் திருப்தியடைந்தார்.சைமன் கம்யூஸ்டுகளும் லிபரல் கட்சியும்தான் உங்களுக்கு இந்தத் திட்டத்தை வகுத்துக்கொடுத்ததாக சுத்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சொன்னதாகக் கூறினார் . அது தவறு என்பதை நெல்சன் எளிதாக முறியடித்தார். ஏனெனில் கம்யூனிஸ்டுகட்சியும் லிபரல் கட்சியும் பார்த்துப் பேசிக்கொள்ளமுடியாத பகைமையுடன் இருந்தனர். சுத்த ஆபிரிக்க தேசிய காங்கிரசின் புழுவுகள் இப்பொழுது வெளுத்தன.

இதனை அடுத்து கனவு நாடாகத் திகழ்ந்த எகிப்தை நோக்கிப் பறந்தனர். நைல் நதியையும், பிரமிடுகளையும் பார்த்தபோது அதன் பழங்கால வரலாற்றுப் பெருமை தோன்றியது. எகிப்தியர்கள் கோபுரங்களைக்கட்டிக்கொண்டிருந்த போது இந்த வெள்ளையர்கள் குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் தானே என மண்டேலா நினைத்துக்கொண்டார்.

எகிப்தின் அதிபர் நாசாத் சோஷலிச முறைப்படி பொருளாதார சீர்திருத்தங்களைச் செய்த கொண்டிருந்தார். நிலத்துக்கு உச்ச வரம்பு செய்தார். சில துறைகளை அரசுடைமையாக்கினார். தொழிற்சாலைகள் வளரத்திட்டம் வகுத்தார். எல்லோருக்கும் கல்வி, என அறிவித்து பெண்களைப் படிக்க வைத்தார். இராணுவத்தை நவீன மயமாக்கினார் சுருங்கச் சொன்னால், ஆபிரிக்க தேசிய காங்கிரசால் வெளியிடப்பட்ட மகா சாசன திட்டங்கள் அமுலாக்கிக் கொண்டிருப்பது போல தெரிந்தது.

ஆலிவர் லண்டனுக்குப் புறப்பட்டார். இவர்கள் கானாவுக்குப் புறப்பட்டார்கள். வழியில் டூனிஸ் நாட்டின் பாதுகாப்பு மந்திரியைச் சந்தித்தார். அவர் தோற்றத்தில் லுதுலி மாதிரியே இருந்தார். அவர் சுத்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸைப் புகழ்ந்தார். அக் கட்சித் தலைவர் ராபர்ட் சிறையிலிருந்து திரும்பிய உடன் உங்களை தீர்த்துக்கட்டி விடுவார் என்று ஒரு போடு போட்டார் ஆத்திரப்படாமல் இயக்க வரலாற்றைக் கூறிவிட்டுத் திரும்பினார். மறுநாள் நாட்டின் தலைவர் போக்கிபாவை சந்தித்தார். இப்பொழுது பாதுகாப்பு மந்திரியின் செயல் வேறு விதமாக இருந்தது. தென்னாபிரிக்கத் தொண்டர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுக்கவும், ஆயுதம் வாங்க ஐயாயிரம் பவுன்கள் தருவதாகவும் உறுதியளித்தார்.

அடுத்துப் போன இடம்மொராக்கோ இது ஐரோப்பா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு கலந்த ஒரு சிறு உலகம் ஆகும். இங்கு எல்லா நாட்டு சுதந்திரப் போராட்ட வீரர்களும் இருந்தனர். அல்ஜீரிய மக்களின் விடுதலைக்காகப் போராடிய தளபதி முஸ்தாபாவும் அங்கு இருந்தார். டாக்டர் முஸ்தாபா போர் நடத்தும் போதே அரசியல் வேலையையும் சேர்த்தே செய்யவேண்டும் ,சர்வதேச கருத்தை திரட்டுவது மிகப் பெரும் அவசியமான ஆயுதம் என்றும் சொன்னார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அகமது பென் பெல்லாவைச் சந்தித்தார். அவர் அண்மையில் பிரஞ்சு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு அல்ஜீரியாவின் பிரதமர் ஆனவர் . இங்கு நடந்த மரியாதை அணி வகுப்பில் இர்ராணுவ உடையில் அல்லாமல் அவரவர் கட்டியலுங்கி அரைக்கால் சட்டை உறுமாலுடன் தடி ,கத்தி, கோடரி ,துப்பாகியை தூக்கிக்கொண்டு நடந்தனர். கடைசியாக அலங் கோல உடையில் சுடானி என்பவர் நடந்து வந்தபோது பலத்த கைதட்டல் எழுந்தது. ஏனெனில் அவர் தன்னந்தனியாக நின்று பிரஞ்சு நாட்டின் ஒரு யூனிட்டை கைது செய்தவர்.

---

## இன்று நல்லூர் கைலாபிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா

### தற்காப்பு நீயே! சமாதானம் நீயே!

நல்லையம் பதி தமிழ் நல்லூராட்சி அரசதானி
நாதர்சிவக் கைலாசர் நற்பிள்ளை பிள்ளையாரே
எல்கைகுக் காவலரண் எண் திசைக் கணபதியே
எல்லைத்திசை தென்மேற்கு அதிபதியே விநாயகரே
தொல்லுலகு காக்குமெம் தலைமகனே முத்தமிழே நீ
தூயபாரதம் எழுதியவா தற்காப்புத் தெய்வம்நீயே
நலலைவேலவ அண்ணாவே ம்சிவசவ சக்திபாலனே
நமசிவாய நீ சமாதானம் நீ நம் கைலாசபிள்ளையாரே

நந்தகுமார்

---

## இராணுவத்தை விரட்ட போராட்டத்தில் இணையும் விவசாய அமைப்புக்கள்?

(மன்னார்)

"எமது மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பிரதான வளமான கட்டுக்கரைக் குளத்தை ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தை விரட் டியடிக்கும் இறுதிப்போரில் எம்மைநாம் முழுமையாக இணைத்துக் கொள்கின்றோம்"

என மன்னார் அடம்பன் பிரதேச விவசாய அமைப்புத் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அடம்பன் பிரதேச விவசாய அமைப்புக்களுக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மன்னார் மாவட்ப் பொறுப்பாளர் தூய வனுக்குமிடையேயான சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் கலந்து கொண்டவர்களில் 27 பேர்தம்மைப்போராட்டத்தில் முழுமையாக இணைத்துக்கொண்டுள்ளனர்.

அவ்வாறு இணைத்துக் கொண்ட பின்னரே அடம்பன் விவசாய அமைப் புத் தலைவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டுக்கரைக் குளத்தின் கீழ் சிறுபோகச்செய்கைக்கு ஆயத்தம் செய்யப்படுகின்ற நிலையில் இராணுவ அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன எனவே இம் முறை சிறுபோகச்செய்கையை நிறுத்தி அனைவரும் போராட்டத்தில் இணைந்து எமது தேசியத் தலைவரின் கரத்தைப்பலப்படுத்துவோம் எனவும் கூறினார். (கு)

## கைக்குண்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள இராணுவக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரு இராணுவத்தினர் காயமடைந் துள்ளனர்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இச்சம்பவம் நடந்துள் ளது. (கு-15)

## ஆயுதங்கள் மீட்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சரசாலைப் பகுதியில் பெருமளவில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இராணுவத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

10கிலோ எடையுள்ள கிளைமோர் கண்ணிவெடிகள் 07, மூன்று பொதிகளில் தலா 15 கிலோ எடையுள்ள வெடி பொருட்கள் , ரி 56 ரக துப் பாக் கிகள், 60 ரவைகள் அடங்கிய ரி-56 மகசீன்கள், 3 கைக் குண்டுகள், ஒரு தானியக் கிக் கருவி ஆகியவை கைப்பற்றப்பட்டன என்று இராணுவத்தரப்பினர் கூறுகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை கந்தளாயில் ரி-56 மகசீன்கள் மூன்று, 9எம். எம் பிஸ்டல் ரவைகள் கைப்பற்றப் பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (கு)





பொலிஸ் சேவையில் புதிதாக 4 ஆயிரம் பேரை சேர்ப்பதற்காக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் உயரம் அளவிடப்படுவதையும் உடலமைப்பு பரிசோதிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# ஈரான் மீது தாக்குதல் நடத்தக்கூடாது அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை!

(மாஸ்கோ)

ஈரான் அணுசக்தி ஆராய்ச்சி என்ற பெயரில் அணு ஆயுதங்களைத் தயாரிக்க முயற்சி செய்ததாக அமெரிக்கா புகார் கூறி வருகிறது. அணு ஆயுததயாரிப்புக்கு தேவையான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை யும் ஈரான் தயாரித்து வருகிறது.

அணு ஆயுத தயாரிப்பு திட்டத்தை கைவிடும்படி ஐ.நா.விடுத்த கோரிக்கையையும் ஈரான் ஏற்கவில்லை. தங்கள் பாதுகாப்புக்காகவே அணு ஆராய்ச்சி திட்டத்தில் ஈடுபடுவதாக ஈரான் கூறிவிட்டது.

இதையடுத்து ஈரானுக்கு பொருளாதார தடைவிதிப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க ஐ.நா.சபையில் தீர்மானம் கொண்டுவரப்படவிருக்கிறது.

இதற்கிடையே ஈரான் மீது தாக்குதல் நடத்துவது பற்றியும் அமெரிக்கா யோசித்து வருகிறது ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த தயாராகி வருகிறது. தனது நாட்டு பாதுகாப்புக்கருதி இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக்கூடாது ஈரான் மீது போர் தொடுத்தால் விபரீத விளைவுகள் ஏற்படும். ஈரான் அணு ஆயுத தயாரிப்பை தடுக்க வேறுபல வழிகளை மேற்கொள்ளலாம் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர்புடின் தெரிவித்துள்ளார். (து)

## WORLD NEWS உலக தரிசனம்

# மக்கள் தொகையை அதிகரிக்க ரஷ்ய அதிபரின் புதிய யுக்தி!

(மாஸ்கோ)

ரஷ்யாவில் மக்கள் தொகை குறைந்து வருவதையடுத்து அதிக குழந்தைகளை பெற்றெடுக்கும் பெண்மணிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று அந் நாட்டின் அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

ரஷ்யாவில் கம்யூனிஸ்ட்டுகளின் ஆட்சி முடிவுற்ற 1991ஆம் ஆண்டு அந்த நாட்டின் மக்கள் தொகை ஒரு கோடியே 48 இலட்சமாக இருந்தது. அது 2003ஆம் ஆண்டு ஒரு கோடியே 45 இலட்சமாக குறைந்து தற்போது ஒருகோடியே 43 லட்சமாகியுள்ளது.

ரஷ்யாவில் குறைந்துவரும் மக்கள் தொகை அந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கு பெரும் கவலையை அளித்துள்ளது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

குறைந்துவரும் மக்கள் தொகை தான் நாட்டின் முக்கிய பிரச்சினை ஒவ்வொரு வருடமும் மக்கள் தொகையில் சராசரியாக ஏழுஇலட்சம் குறைந்து வருகிறது. மக்கள் தொகையை அதிகரிப்பதற்காக சிறப்பு நிதியுதவி திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதற்காக முதல் குழந்தையை பெறும் குடும்பத்திற்கு மாத உதவி தொகையாக 1500ரூபய் (ரஷ்ய கரன்சி) வழங்கப்படும் இரண்டாவது குழந்தை பெறும் பெண்ணுக்கு அதில் இரண்டு மடங்கு தொகை அளிக்கப்படும்.

சமூகத்தில் குடும்பம் மற்றும் குடும்பம் தொடர்பான விஷயத்தில் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படாதவரை குழந்தை பிறப்பு விகிதம் குறைந்துவரும் பிரச்சினையை தடுக்க முடியாது. ரஷ்யாவில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் குழந்தைகள் அனாதை இல்லத்தில் வாழ்ந்து வருகின்றன. ரஷ்யர்களைவிட வெளிநாட்டினர் தான் அதிக அளவில் இந்த குழந்தைகளை தத்தெடுக்கின்றனர்.

வெளிநாட்டினர் 70 இலட்சம் பேர் சட்டவிரோதமாக ரஷ்யாவில் வேலை பார்த்து வருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து இங்கு வருபவர்கள் ரஷ்ய கலாசாரத்தையும் பண்பாடுகளையும் மதிக்க வேண்டும் என்றார். (து)

# அங்கோலாவில் வாந்தி பேதி 1100 பேர் மரணம்

ஆபிரிக்க நாடான அங்கோலாவில் வாந்திபேதி பரவிவருகிறது. 2 மாதங்களில் இது தீவிரம் அடைந்திருக்கிறது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் வாந்திபேதிக்கு ஆயிரத்து 156 பேர் பலியாகினர்.

30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நோயின் தீவிரம் இன்னும் குறையவில்லை. பலி எண்ணிக்கை உயர வாய்ப்பு இருக்கிறது என்று உவலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

ஆபிரிக்காவில் எண்ணெய்வளம் அதிகம் கொண்ட நாடுகளில் அங்கோலா 2ஆம் இடத்தில் இருக்கிறது. எண்ணெய் மூலமாக அதிக வருமானம் கிடைக்கிறது. எனினும் நாட்டின் பெரும் பாலான மக்கள் வறுமையில் வாடுவதும் சுகாதார மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு அதிகம் நிதி ஒதுக் காத்ததும் அதிருப்தி அளிக்கிறது. என்றும் கூறப்படுகிறது. (து)



ஆபிரிக்காவில் உள்ள கமரூன் நாட்டலீருந்து ஹொங் ஹொங் வழியாக கடத்தப்பட்ட யானை தந்தங்களை ஹொங் ஹொங் சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். கப்பலில் மரக் கட்டைகளுடன் மறைத்து வைக்கபட்டிருந்த நான்குதொன் யானை தந்தங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



பிஜி தீவில் கடந்த 6ஆம் திகதி பொதுத்தேர்தல் தொடங்கியது. நூற் றுக்கும் அதிகமான தீவுக்களை கொண்டிருப்பதால் பிஜியில் ஒருவார காலம் தேர் தல் நடைபெறும். தலைநகர் சுவாவில் உள்ள ஒரு பாடசாலையில் வாக்களிப்பதற்காக மக்கள் காத்திருக்கின்றனர்.

# நேபாளத்தில் மிரட்டிப் பறித்த சொத்துக்களை மீள ஒப்படைக்கும் மாவோ.தீவிரவாதிகள்

தனிநபர்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடம் இருந்து நியாயமற்ற முறையில் பறித்த சொத்துக்களை திரும்ப ஒப்படைத்து வருகின்றனர் நேபாள மாவோயிட்டு தலைவர்கள். அதேநேரத்தில் சிறையில் இருக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை விடுவிக்கும் பேச்சுவார்த்தையை அரசு விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

நேபாளத்தில் பிரதமர் கொய்ராலா தலைமையிலான ஏழு கட்சி கூட்டணி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் நீண்டகாலமாக போராட்டம் நடத்தி வந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தற்காலிக சண்டை நிறுத்தத்தை அறிவித்தனர். நேபாளத்தில் அமைதி நிலவ நிரந்தர சண்டை நிறுத்தத்துக்கு கொய்ராலா தலைமையிலான புதிய அரசு மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தது.

இதையடுத்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் அரசுக்கும் இடையே 12 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தில் நேபாளம் மற்றும் இந்திய சிறைகளில் உள்ள மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை அரசு விடுவிக்கவேண்டும். போராட்டங்களின் போது அப்பாவி பொதுமக்களிடமும் அரசியல் கட்சிகளிடமும் தீவிரவாதிகள் நியாயமற்ற முறையில் பெற்றிருந்த சொத்துக்களை திரும்பக் கொடுக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றிருந்தன.

இதனடிப்படையில் மிரட்டி பறித்த சொத்துக்களை திரும்ப ஒப்படைக்கும் பணியை மாவோயிஸ்ட்டுகள் ஆரம்பித்துள்னர். இதுகுறித்து மாவோயிஸ்ட் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

அரசுடன் நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப்படி, நியாயமற்ற முறையில் அரசியல் கட்சிகளிடமும் பொதுமக்களிடமும் பறிமுதல் செய்யப்பட்ட வீடு, நிலம் போன்ற சொத் துக்களை ஒப்படைக்கும் பணியை நாங்கள் தொடங்கி விட்டோம் எல்லா மாவோயிஸ்ட் பிரிவுத் தலைவர் களுக்கும் இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில் எங்களுக்கு சாதகமான முடிவை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்கிடையே சிறையில் உள்ள தீவிரவாதிகளை சட்டப்படி விடுவிக்கும் பணி ஏற்கனவே தொடங்கிவிட்டது என அரசு தெரிவித்துள்ளது. நேபாளத்தின் தெற்குப் பகுதியில் ஜானக்பூர் மாவட்ட சிறையில் இருந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் சிலர் கடந்த 8ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர் என ஏஜென்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)

# இஸ்ரேலில் அதிகளவு அணு ஆயுதங்கள்!

## பிரி.நிபுணர் தகவல்

(லண்டன்)

இஸ்ரேலில் அணு ஆயுதங்கள் பெருமளவில் உள்ளன. உலகில் அணு ஆயுதங்களை வைத்திருக்கும் 6வது நாடாக இஸ்ரேல் உள்ளது என்று பாதுகாப்பு தொடர்பான பிரிட்டிஷ் நிபுணர் ஜோன் எல்டிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

எண்ணிக்கை தெரியாத அளவில் ஏவுகணைகள் இஸ்ரேல் வசம் உள்ளன மூன்று நீர்மூழ்கிக் கப்பல்களையும் அது வாங்கியுள்ளது. அணு ஆயுதங்களைக் கொள்முதல் செய்வதில் இஸ்ரேல் முனைப்புடன் சமீப காலங்களில் கவனம் செலுத்தி வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச்செய்தி இஸ்ரேல் தரப்பில் ஒப்புக் கொள்ளப்படவோ அல்லது மறுக்கப் படவோ இல்லை. இதனிடையே இஸ்ரேலை அழிக்க ஈரான் முயன்றால் அது தனது அழிவுக்கே வழிவகுக்கும் என்பதை ஈரான் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று இஸ்ரேல் துணை பிரதமர் ஷிமன் பிரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (து)

# 32 அடி உயரத்தில் ஆஞ்சநேயர் சிலை

புனித நகரமான ஹரித்துவாரில் ஒரே கல்லால் ஆன 32 அடி உயரமுள்ள பிரமாண்டமான ஆஞ்சநேயர் சிலையை நிறுவ உடுப்பி பாலிமர் மடம் முடிவு செய் துள்ளது. உடுப்பி பாலிமர் மட குரு ஸ்ரீவித்ய மான்ய தீர்த்த சுவாமிகளின் ஆராதனை விழா மற்றும் நரசிம்ம ஜெயந்தி விழா நடந்தது. இதில் கலந்துகொண்ட மடத்தின் குரு செய்தியாளர்களிடம் கூறுகையில்,

புனித நகரமான ஹரித்துவாரில் ஆஞ்சநேயர் சிலையை நிறுவ வேண்டும் என்பது எங்களது மடத்தின் குரு ஸ்ரீவித்ய மான்யதீர்த்த சுவாமிகளின் நீண்ட நாள் விருப்பம். தற்போது அவரது விருப்பத்தை நிறைவேற்ற முடிவுசெய்துள்ளோம்.

இதன்படி ஒரே கல்லால் ஆன 32 அடி உயரமுள்ள பிரமாண்டமான ஆஞ்சநேயர் சிலையை ஹரித்துவாரில் நிறுவ முடிவு செய்துள்ளோம். சிலையை செதுக்கும் பணி பெங்களூர் அருகேயுள்ள தேவனஹல்லியில் நடந்தது. சிலை நிறுவப்படுவதற்கு முன்ஹரித்துவாரில் இறுதிக் கட்ட பணிகள் நடைபெறும் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சிலையை நிறுவமுடிவு செய்துள்ளோம். சிலை நிறுவும் விழா மூன்று நாட்கள் நடைபெறும்.

பல்வேறு மடங்களைச் சேர்ந்த குருக்கள் இந்த விழாவில் கலந்து கொள்வர் இதுதவிர ஆன்மிக மையம், மருத்துவ மனைகள், பசு பாதுகாப்பு மையம் உட்பட 10 முக்கிய திட்டங்களை ஹரித்துவாரில் செயல் படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார். (து)

துதிபாடும் கூட்டத்தை உருவாக்குவதே அரசசாங்கக்கலை.

-பெர்னார்ட்ஷா

வலம்புரி

# கலைஞரே! இரட்டை வேடம் கலைந்து ஈழத்தமிழர்களுக்கு உதவுக!

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. கூட்டணி தமிழகத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளது.

தி.மு.க., அ.தி.மு.கவில் எந்தக் கட்சி வெற்றி பெறும் என்று தீர்க்கமாகக்கூற முடியாத நிலையில் கலைஞரின் தி.மு.க.கூட்டணி வெற்றி பெற்றமை மிகப்பெரும் சாதனை என்றே கூறவேண்டும்.

நடைமுறைப்படுத்தவே முடியாத அளவில் அரிசி ரூபா 2 , இலவச கலர் ரீ.வி., திருமணத்திற்கான கொடுப்பனவு அதிகரிப்பு என்றெல்லாம் கூறி ஒருவாறு கலைஞர் கருணாநிதி ஆட்சியைப் பிடித்து விட்டார் என அரசியல்வாதிகள் கூறிக்கொண்டாலும்,

தி.மு.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஈடாக செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை அதி அற்புதமாக சோடித்திருந்தது.

இவ்விதம் இரண்டு கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனச் சோடனைகள் வியக்கத்தக்கதாக இருந்தாலும் கலைஞர் கருணாநிதியின் தி.மு.க கூட்டணி வெற்றிவாகை பெறுவதற்கு அடிப்படைக் காரணம் கலைஞர் கருணாநிதி என்றால் அது மிகையாகாது.

அதாவது ஊன்றுகோலைப் பிடித்தவாறுகூட வீட்டிற்குள் நடக்கமுடியாத வயதில் கலைஞர் கருணாநிதியோ ஊர் ஊராக -பட்டிதொட்டிகள் எல்லாம் சென்று தேர்தல் பிரசாரம் செய்தாரே அதுவே அவரை வெற்றி கொள்ளவைத்தது.

முதுமைக்கும் இறுதிக்கால வாழ்வியலுக்கும் உயர்வான மதிப்பளிக்கும் தமிழக மக்கள் கலைஞர் கருணாநிதியை முதல்வர் ஆக்குவதென்று முடிபு செய்து விட்டார்கள்.

ஐயா, கலைஞரின் வயது அவரின் இருப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது. இத் தேர்தலில் கருணாநிதி தோற்றுவிட்டால் அடுத்த தேர்தலுக்கு அவர் இருப்பாரா? இல்லையா? என்பது கேள்விக்குறி.

ஆக 15 வருடங்களுக்கு மேல் முதல்வராக இருந்தவர் தமிழுக்காக வாழ்கிறேன் எனக்கூறி குறளோவியம் முதல் பல காவியங்களைத் தந்தவர்.

வள்ளுவர் போல் வாழ்ந்து காட்டிய பெருந்தகை தமிழை செம்மொழியாக்கியவர். அந்த மனிதரை இறுதிக்காலத்தில் முதல்வர் ஆக்குவது தமது கடமையும் தார்மீகப் பொறுப்புமென தமிழக மக்கள் கருதினர். அதுவே அவருக்கு வெற்றியைக் கொடுத்தது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை கலைஞரின் வெற்றிக்கும் ஜெயலலிதாவின் தோல்விக்குமான காரணங்கள் என்ன என்ற ஆய்வு தேவையற்றது.

மாறாக தமிழகத்தில் ஆட்சி அமைக்கப்போகும் கலைஞர் கருணாநிதி ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கையாகும்.

கலைஞரே! கடந்த காலங்களில் தாங்கள் காட்டிய இரட்டைவேடம்போதும். ஐயா வேடம் கலைந்து ஈழத் தமிழர் வேதனையைத் தீரும். இது தமிழுக்கும் தமிழருக்கும் தாங்கள் செய்யும் பெருந்தொண்டாகும்.

வை.கோ. என்ற எம் பாச உறவுப்பாதை மாறிப் பயணித்ததால் உதவுவார் யார் உளரோ என்றபோது, நீரே முதல்வரானீர். உம் உதவி ஈழத்தமிழரின் விடிவிற்கு உதவட்டும்.

# நிபந்தனைகள் இன்றிப் பேச புலிகளுக்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## என்கிறார் ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் மற்றும் அமைதியை விரும்பும் மக்கள், இலங்கை மீது அக் கறை கொண்ட சர்வதேச நாடுகள் என்பன குறிப்பாக விடுதலைப்புலிகளை புதிய கோரிக்கைகள், நிபந்தனைகள் எதுவும் விதிக்காமல் ஜெனீவா முதல் சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட விட யங்களை கடைப்பிடித்து அடுத்தகட்டப்பேச்சு வார்த்தைகளில்கலந்துகொள்ளச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் ஹெகலிய ரம் புக்வெல கேட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசியினால் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவர முடியாமலிருக் கிறதே? இதனால் இலங்கை அரசிற்கு ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? எனவெளிநாட்டு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் அந்த ஊடகத்துக்கு இதுபற்றித் தெரிவிக்கையில்,

ஏமாற்றம் என்ற சொல்லை நாம் பயன் படுத்தவில்லை. எனினும் சர்வதேச நாடு கள் ஒருபடி மேலே சென்று தமிழீழ விடு தலைப்புலிகளை பேச்சுக்கு அழைத்து வர முயற்சித்திருக்கலாம். நிபந்தனைகள் விதிப்பதை விடுதலைப்புலிகள் கைவிட்டு விட்டு, பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அழுத்தங்களை சர்வதேச நாடுகள் கொடுத்திருக்கலாம்.

அவ்வாறு கொடுத்தால் விடுதலைப் புலிகள் ஒரு முடிவுக்கு வந்திருப்பார்கள். போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டு நடத்தும் தாக்குதல்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கும் என்றார். (க-9)

# பணிப்புறக்கணிப்பு தொடர ஒத்துழைக்குமாறு த.தே.தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள்

இராணுவ அதிகாரிகளின் அச்சுறுத்த லுக்கு அஞ்சி அரச நிர்வாக பணியாளர் கள் பணிப்புறக்கணிப்பை கைவிடவேண்டாம் என யாழ்.மாவட்ட தமிழ்த்தேசிய தொழிற்சங்க கூட்டமைப்பு கேட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பு விடுத் துள்ள அறிக்கையில்,

கடந்த சனிக்கிழமை முதல் யாழ்.குடா நாடு எங்கும் இடம்பெற்றுவரும் பணிப் புறக் கணிப்பு அரசாங்கத்தை பெரும் இக்கட் டில் ஆழ்த்தியுள்ளது.

எமது இளம்குருத்துக்களை புத்தூரிலும், நெல்லியடியிலும், மந்துவிலிலும் கொன் றொழிக்க ஆரம்பித்த வேளையிலேயே யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன் றியம் பணிப்புறக்கணிப்புக்கானவேண்டுகோளை முன்வைத்தது.

ஆயுதம் தாங்கியவர்களை எதிர்த்து நிராயுதபாணிகளான தமிழ்த் தேசத்தில் உள்ள அரசநிர்வாகப் பணியாளர்கள் மேற் கொண்டுவரும் மௌனயுத்தம் அரசை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

நேற்று முன்தினம் முதல் இராணுவ அதிகாரிகள், தமிழ்ப் பணியாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் பணிப்புறக் கணிப் பினை முறியடிக்கும் முனைப்பில் ஈடுபட் டுள்ளனர். இந்த அச்சுறுத்தல்களுக்கு எவரேனும் அடிபணிய வேண்டாமென நாம் வேண்டுகின்றோம்.

தமிழ் தேசத்தின் ஒவ்வொரு தொழிற் சங்கமும் தனது அங்கத்தவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதை தயவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

அனாவசியமான முறையில் தமது பணியிடங்களுக்கு செல்வதையும், வரவுப் பதிவேட்டில் கையெழுத்து இடுவதையும், நிர்வாகிகள் வரவினை வலியுறுத்துவதை யும் தவிர்க்கும்படி தனது அங்கத்தவர்களை வேண்டிக் கொள்ளுமாறு தொழிற்சங்க நிர்வாகங்களை நாம் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனிதாபிமான அத்தியாவசிய சேவை கள் தவிர்ந்த சகல அரச நிர்வாக பணிகளி லும் கல்வி நிறுவனங்களிலும் பணிப் புறக்கணிப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் மறு அறிவித்தல் வரும் வரை தொடர்ந்து இடம்பெறும் எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (க)

## ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பனியின் காப்பீடுகளை தபால் நிலையங்களில் விநியோகிக்க நடவடிக்கை!

நாட்டிலுள்ள தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள் ஊடாக ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பனியின் காப்பீடுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகின்றது. அவ்வாறே காப்புறுதி உடன்படிக்கை களை புதுப்பித்துக் கொள்வது, தவணைக் கட்டணங்களை செலுத் துவது போன்ற பணிகளையும் தபால் நிலையங்கள் ஊடாக நிறை வேற்றக் கூடியதாக இருக்குமென தபால் தொலைத் தொடர் புகள் அமைச்சு தெரிவித் துள்ளது.

முதற்கட்டமாக தனிப்பட்ட வீடுகளுக்கான காப்புறுதி, தனிநபர் விபத்துக் காப்புறுதி, தனிநபர்வீட்டுத்தீவிபத்துக்காப்புறுதி, 3ஆம் தரத்து மோட்டார் வாகன காப்புறுதி ஆகிய 4 காப்புறுதி முறைகள் அறிமுகம் செய்து வைக் கப்படும். ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பனியுடன் சேர்ந்து அமுல்செய்யும் இத்திட்டத்தின் முக் கிய நோக்கமாக அமைவது தபால் திணைக் களத்தின் வருவாயை மேம்படுத்துவதாகும். அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையைவழங்குவதும் மற்றுமொரு நோக்கமென தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சு அறிவித்துள்ளது. (க-9)

## தொழிலில் ஈடுபடும் சிறுவர்கள் குறித்த தகவல்கள் சேகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பிரதேசங்களிலும் தொழில் புரிந்துவரும் சிறுவர்கள் தொடர்பான தக வல்களைச் சேகரிக்க சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களம் நடவ டிக்கை எடுத்துள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் இந்தத் திட் டத்தை மேற்கொள்ளவிருப்பதாக திணைக் களத்தின் ஆணையாளர் சரத் அபயகுண வர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக சிறுவர்கள் தொழில் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்ட தற்கான காரணம் குறித்து ஆராயப்படும்.

மேலும் குறித்த சிறுவர்களின் குடும்ப நிலை குறித்தும் விசேட கவனம் செலுத் தப்படும்.

தகவல்கள் சேகரிக்கப்பட்ட பின்னர் சிறு வர்களுக்காக விசேட செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பாடசாலை செல்லக்கூடிய வயதில் உள்ளவர்களை மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்ப திட்ட மிட்டுள்ளது என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு 2ஆவது கட்டமாக கடந்த 9ஆம் திகதி முதல் விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

இதன்படி எதிர்வரும் 16ஆம் திகதி லங்கா சித்த ஆயுள்வேத நிலையத்தில் முற்பகல் 8.00 மணி தொடக்கம் 10.30 மணி வரையும், அத்தியடி பிள்ளையார் கோவிலில் முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.30 மணி வரையும், இராசாவின்தோட் டம் அருள்மாதா சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.30 மணி வரையும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

மறுநாள் 17 ஆம் திகதி கொட்டடி முத் தமிழ் சனசமூக நிலையத்தில் முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.30 மணிவரை யும், வண்ணார்பண்ணை நீராவியடி சன சமூக நிலையத்தில் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.30 மணி வரையும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படும்.

18ஆம் திகதி நாவாந்துறை வள்ளுவர் சனசமூக நிலையத்தில் முற்பகல் 8.00 மணி தொடக்கம் 10.30 மணிவரையும், காமாட்சி சனசமூக நிலையத்தில் முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படும்.

19ஆம் திகதி கில்னர் வீதியில் உள்ள பாலர் பாடசாலையில் முற்பகல் 8.00 மணி தொடக்கம் 10.30 மணி வரையும், கொட் டடி சனசமூக நிலையத்தில் முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.30 மணி வரை யும், சீனிவாசகம் வீதியில் உள்ள சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.00 மணி தொடக் கம் 3.30 மணிவரையும் வளர்ப்பு நாய் களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படும். (க-9)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



எழுந்து நில். வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன். தோள்மீதே சுமந்து கொள். உனது விதியைப் படைப்பவன் நீயே எனபதைப் புரிந்து கொள. உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக் குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்

# கிரனைட் தாக்குதலில் சிப்பாய் பலி
# இராணுவம் சுட்டதில் வயோதிபர் பலி
## கல்வியங்காட்டில் சம்பவம்

கலவியங்காடு சட்டநாதர் சிவன்கோயிலுக்கு முன்னால் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இத் தாக்குதலினையடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் படையினர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் மூத்தவிநாயகர் வீதி நல்லூரைச் சேர்ந்த முத்துவேல் காளிதாஸ் (வயது 75) என்ற முதியவர் பலியானவராவார்.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளைமேற் கொண்டதுடன் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.(ச-15,132,133)



## வடமராட்சி கடலில் பீரங்கிச் சத்தம்

(துன்னாலை)

வடமராட்சி முனை, கற்கோவளம் ,மணற்காடு பகுதி கடற்பரப்பில் தொடர்ச்சியாக கேட்கப்பட்ட பீரங்கி வேட்டுக்களால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

நேற்று பிற்பகல் 05.15 இற்கு ஆரம்பமான பீரங்கி வேட்டுக்கள் தொடர்ச்சியாக 15 நிமிடங்களுக்கு மேலாக கேட்டதால் வீதிகளில் பல்வேறு தேவைகளுக்கு சென்றோர் பதறியடித்துக் கொண்டு வீடுகளுக்கு ஏகினர்.

இதனையடுத்து வடமராட்சிப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. (ச-101)

## தமிழக முதல்வ...

தமிழ்நாட்டுக்கான இந்திய அரசு பிரதிநிதியான ஆளுநர் பர்னாலாவை இன்று சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரவுள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை கலைஞர் தலைமையில் புதிய அரசாங்கம் அமையவுள்ளது. தமிழகத்தின் முதல்வராக ஐந்தாம் முறை கலைஞர் கருணாநிதி பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை தொல் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இரண்டு தொகுதிகளில் வென்றுள்ளது. தேசிய திரா விடமுற்போக்கு திராவிடக்கழகத்தின் தலைவரான நடிகர் விஜயகாந் விருத்தாசலம் தொகுதியில் வெற்றி பெற்றார். ஜெயலலிதாவின் அ.தி.மு.க.தோல்வியடைந்ததற்கு விஜயகாந் வென்றதே முக்கிய காரணம் என ஆய்வாளர்கள் கருத்துத்தெரிவித்தனர்.(ச-05)

## திருமலை-வன்னி...

நேற்று மாலை 5.45 மணியள்வில் வன்னி வான்பரப்பில் நுழைந்த விமானப்படையின் கிபீர் விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது சரமாரியான குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளன.

சுமார் 10 நிமிடத்திற்கு மேலாக-கிபீர் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்திவிட்டுச் சென்றன. மீண்டும் மாலை 6.25 மணியளவில் கிபீர் விமானங்கள் தொடர்ச்சியாக தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி புறநகர்ப் பகுதிகளில் குண்டுகள் வீழ்ந்ததாகவும் இவற்றில் ஒன்று இரணைமடுப்பகுதியில் வீழ்ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாங்குளம் பகுதியில் எட்டுக் குண்டுகள் வீசப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. யாழ்.வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் இருந்து விடுதலைப்புலிகளின் பகுதியைநோக்கி நேற்று பிற்பகல் தொடர் எறிகணை மற்றும் ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களை படையினர் மேற்கொண்டுள்ளதாக புலிகள் குற்றஞ்சாட்டினர். (ச-05)

## முன்னாள்...

இலங்கை யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததையடுத்து மார்ச் 2002 ஆம் ஆண்டு முதல் 2003 ஆண்டு வரை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக பணியாற்றினார்.

அதன் பின்னர் பெப்ரவரி 2004 ஆம் ஆண்டு மீண்டும் அவர் இலங்கை திரும்பினார். சர்வதேச அளவிலான கண்காணிப்புக்குழுக்களில் மேஜர் ஜெனரல் ட்றொன் புறூவ் ஹெவ்டே பணியாற்றியுள்ளார்.

லெபனானில் 1993 ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை பணியாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (I)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில்

தனபாலசிங்கம் தர்மபாலன்
பெண் லீலாவதி,
விநாயகர் வீதி, நல்லூர்வடக்கு,
நல்லூர்.

வழக்கு இல D/667 எதிர் வழக்காளி

தனபாலசிங்கம் தர்மபாலன்
"வெள்ளாம்போக்கட்டி",
கொடிகாமம்.
எதிராளி/

மேலே குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

தனக்கும் உமக்குமிடையேயுள்ள விவாகத்தை ரத்துச் செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு 05 மாதம் 26 ஆந்நாளன்று அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்திற்கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப் படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைபு
பவானி சற்குணராசா .
வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 - ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம், பதிவாளர்.
2006 ஆண்டு 05 மாதம் 04 ஆந் நாளாகிய இன்று

425

# தமிழ் மக்கள் மீதான படுகொலைக்கு இராணுவத்தினரே முழுப்பொறுப்பு
## க.கா.குழு பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதில் இராணுத்திற்கு தொடர்பிருப்பதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் வவுனியா கண்காணிப்புக்குழு அதிகாரி ஜோனி கனினென் றொய்ட்டருக்குத் தெரிவித்துள்ளார். தமிழர்கள் மீதான படுகொலைகளில் இராணுவத்திற்கு தொடர்பிருப்பதாக-நாங்கள் நம்புகின்றோம். — —

இப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட விதம் அனைத்தும் இதைத் தெளிவுபடுத்துகிறது. இராணுவச் சோதனைச்சாவடி அருகே 60 மீற்றர் தொலைவில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

ஆனால் படைத்தரப்பினரோ தங்களுக்கு எதுவும் தெரியாது என்கின்றனர். விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் கடந்த மாதம் மட்டும் 40 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் வழமைபோல இராணுவம் மறுத்துள்ளது என்றார். இப் படுகொலைகளில் அரசாங்க படையினருக்கு எதுவித தொடர்பும் இல்லை என்றும் எமது இராணுவத்தினர் கட்டுப்பாடானவர்கள் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இராணுவத்தின் படுகொலை தொடர்பாக கண்காணிப்புக்குழு முதன்முறையாக பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளது. இதைத்தவிர தங்களுக்கு வேறு ஆயுதம் எதுவும் இல்லை என்றும் கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்துள்ளதாக றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது. (ச-.5)

# காணாமல் போனோரை மீட்க க.கா.குழுவிடம் கோரிக்கை

மந்துவில் கேரத்து அம்மன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த சனிக்கிழமையிரவு ஆலயத்தில் தங்கியிருந்து காணாமல் போன எட்டு இளைஞர்கள் பற்றிய தகவல்களை பெற்றுத்தருமாறு கோரி அவர்களது பெற்றோர்கள் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

மகஜரின் பிரதிகள் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ்,மனித உரிமைகள் ஆணைக்குழு,சர்வதேச செஞ்சிலுவை சங்கக் குழு, யு.என்.எச்.சி.ஆர். என்பவற்றின் பிரதிநிதிகளிடமும் கையளிக்கப்பட்டது. (ச-15)

## திருமலையில்...

பொங்கு தமிழ்ப்பேரவை பிரதிநிதிகளை சிங்கள பௌத்த பிரதிநிதிகள் நேற்று சந்தித்துப் பேசினர்.

சிங்களவர்களின் வெசாக் பண்டிகை நிகழ்வுகள் இன்று தொடங்குகின்றன. திருகோணமலை நகரில் உள்ள புத்த விகாரைகளில் இடம் பெறும் நிகழ்வுகளில் சிங்களவர்கள் பங்கேற்கவுள்ளதால் ஹர்த்தாலை கைவிடுமாறு சிங்களப்பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

அவர்களின் வேண்டுகோளை ஏற்று இன்றும் நாளையும் நடத்தப்படவிருந்த ஹர்த்தாலை கைவிடுவதாக பொங்கு தமிழ்ப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (ச-05)

## வெற்றிலைக்கேணி...

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையில் நேற்று நடந்த மோதலில் கடற்படைக்கப்பலில் இருந்த 700 கடற்படையினர் சுற்றிவளைக்கப்பட்டனர்.

திருகோணமலையில் இருந்து 700க்கும் மேற்பட்ட கடற்படையினரை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படைக்கப்பலை பருத்தித்துறையில் கடற்புலிகளின் 20 மேற்பட்ட படகுகள் சுற்றிவளைத்தன.

இதன்போது இடம்பெற்ற மோதலில் கடற்படையின் கப்பலுக்கு பாதுகாப்பாக வந்த இரு படகுகளும் பருத்தித்துறையில் மாலை 5 மணியளவிலும் அதன் பின்னர் வெற்றிலைக்கேணிப் பகுதியில் மாலை 5.15மணியளவிலும் கடற்புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

டோறாப்படகு ஒன்றில் இருந்த 15முதல் 20 வரையான கடற்படையினர் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவத் தரப்பை மேற்கோள்காட்டி றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து கடற்படையினருக்கு உதவுவதற்காக விமானப் படைக்குச் சொந்தமான கிபீர் விமானம் சம்பவ இடத்திற்குச் சென்று கடற்புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதன்போது புலிகளின் பல படகுகள் சேதமடைந்ததாகவும் இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார்.

எனினும் 700 பேருடன் சென்ற படகு நேற்றிரவுவரை புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்ததாகவும் அவர்களின் தாக்குதலை எதிர்கொண்டு சர்வதேச கடற்பரப்பில் அக்கப்பல் தஞ்சமடைந்துள்ளதாகவும் நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. கடற்படைக் கப்பலில் இரண்டு கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-05)

# விடுதலைப்புலிகளுக்கு கடல் சார் உரிமையில்லை
## கண்காணிப்புக்குழு அறிக்கை

(கொழும்பு)

தமிழர் தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கடல் மற்றும் வான் வழிப்பயன்பாட்டு உரிமைகள் ஏதும் இல்லை என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இராணுவத்தை ஆத்திரமூட்டும் வகையில் கடலில் தமிழீழ விடுதலைப்புலிகள் நடமாடுவது யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலாகும். நேற்று கடற்படையின் ஒரு படகை மூழ்கடித்துள்ளனர்.

படகில் இருந்த கண்காணிப்புக்குழுவினருக்கும் பாரிய ஆபத்து ஏற்பட்டது. இலங்கையைச் சுற்றிய கடல் பிரதேசமானது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகும்.

சர்வதேச சட்ட விதிகளின் படி போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவரால் இது ஏற்கப்பட்டுள்ளது. அரச சார்பற்றோர் எவரும் கடல் மற்றும் வான்வெளிகளை பயன்படுத்த முடியாது. விடுதலைப்புலிகளுக்கும் உரிமை இல்லை.

கடற்படையுடன் இணைந்து கண்காணிப்புப்பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்று விடுதலைப்புலிகள் எச்சரித்தனர். இத்தகைய அச்சுறுத்தல்களை நாம் பாரதூரமாகப் பார்க்கிறோம். யுத்த நிறுத்தத்திற்கமைய கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடாது என்ற பொறுப்பு விடுதலைப்புலிகளுக்கு உண்டு.

ஆகையால் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் உடனே கைவிட வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறோம். இத்தகைய நடவடிக்கைகள் அமைதிப்பேச்சுக்களை சீர்குலைத்து போருக்கே வழிவகுக்குமென கண்காணிப்புக்குழு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ச-05)

## சித்திரா பௌர்ணமி நிகழ்வும் திருவிளக்குப் பூஜையும்

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் நடாத்தும் சித்திரா பௌர்ணமி விழாவும் திருவிளக்குப் பூஜையும் இன்று காலை 9 மணிக்கு தாவடி இ.த.க. பாடசாலை யின் பழைய கட்டத்தில்நடைபெறும். (க-9)

## ஹெவ்டேயின்...

தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன் புறூவ் ஹெவ்டே அவர் கள் காலமானது குறித்து எமது இரங்கலை யும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள் கின்றோம் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ச-05)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 12.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.